**விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்:** முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப.,

ந.க.எண். 3281/2018/பேரூ2 நாள்.08.11.2018

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – விழுப்புரம் மாவட்டம் – பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும் வரித்தண்டலர்கள் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015–2016 ஆண்டுக்கான தொகுதி IV–ல் அடங்கிய நேரடி போட்டி தேர்வில் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டது – விழுப்புரம் மாவட்டப் பேரூராட்சிகள் அலகில் பணி நியமனம் செய்யப்பட்டது – வரித்தண்டலர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண்.271, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 04.04.1990.
2) சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித ந.க.எண்.5451/PSD-H2/2017, நாள். 15.09.2017.
3) விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.156/2016/பேரூ2, நாள். 07.11.2017.
4) மரக்காணம் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 169/2017/அ1, நாள். 28.09.2018.
5) திருக்கோயிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். அ1/860/2017, நாள். 10.10.2018.
6) அரகண்டநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 219/2017/அ1, நாள். 15.10.2018.
7) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய 2015–16ம் ஆண்டுக்கான தொகுதி IV–ல் அடங்கிய நேரடி போட்டி தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி விழுப்புரம் மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நபர்களுக்கு பார்வை 3–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் வாயிலாக வரித்தண்டலர் காலிப் பணியிடங்களில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

மேற்காணும் ஆணையின்படி, சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளில் வரித்தண்டலர் பணியிடத்தில் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

**பணி வரன்முறை விபரம்**

| வ. எண் | பணியாளர் பெயர் / பணிபுரியும் பேரூராட்சி (திருவாளர்கள்) | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி.மு. சாந்தி, வரித்தண்டலர், மரக்காணம் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம். | 20.11.2017 முற்பகல் | 20.11.2017 முற்பகல் |
| 2 | திரு.R. சரவணன், வரித்தண்டலர், திருக்கோயிலூர் பேரூராட்சி | 15.11.2017 முற்பகல் | 15.11.2017 முற்பகல் |
| 3 | திரு. P. ஆனந்தன், வரித்தண்டலர், அரகண்டநல்லூர் பேரூராட்சி | 17.11.2017 முற்பகல் | 17.11.2017 முற்பகல் |

மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பணிபுரிந்து வரும் பணியாளர்களின் பணியினை, அவர்கள் பணியில் இணைந்த நாள் முதல் அவர்களது பணியினை கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து (Service Regularization) ஆணையிடப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group -IV services / 2015-2016 recruitment "

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
விழுப்புரம் மாவட்டம்.

பெறுதல்

1) திருமதி.மு.சாந்தி, வரித்தண்டலர், மரக்காணம் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்
(செயல் அலுவலர் வழியாக)
2) திரு.R. சரவணன், வரித்தண்டலர், திருக்கோயிலூர் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்
(செயல் அலுவலர் வழியாக)
3) திரு. P. ஆனந்தன், வரித்தண்டலர், அரகண்டநல்லூர் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்
(செயல் அலுவலர் வழியாக)

நகல்:

1) பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108 அவர்களின் தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
2) செயல் அலுவலர், மரக்காணம் / திருக்கோயிலூர் / அரகண்டநல்லூர் பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம் (உரிய நடவடிக்கைக்காக)

ந.க. எண் 329/2018 நாள்: 19.11.2018

செயல் அலுவலர்
...கண்டநல்லூர் பேரூராட்சி

பெறுநர்:
P. ஆனந்தன்
வரித்தண்டலர்
பேரூராட்சி அலுவலகம்
அரகண்டநல்லூர்